Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை -24 | 07-02-2004 | சனிக்கிழமை | ஓசை-354

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(F-9205) 077-6059672



# நோர்வேயின் சமாதான முயற்சிகளில் எந்தவித தொய்வும் ஏற்படவில்லை

## சமாதானத் தூதுவர் எரிக் சூல் ஹெய்ம்

(ஒஸ்லோ)

**நோர்வே அரசின் சமாதான நடவடிக்கைககளில் எந்தவித தொய்வு நிலையும் ஏற்படவில்லை என்று நோர்வே அரசின் சமாதானத் தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் சமாதான முன்னெடுப்பின் மூலம் அரசியல் தீர்வொன்றைக் காணும் நடவடிக்கைகளில் ஆவலுடன் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்கள் தெரிவித்தது போல தாம் சமாதான நடவடிக்கையில் இருந்து முற்றாக வெளியேறவில்லை எனவும், தாம் தொடர்சியாக சிறிலங்கா சனாதிபதி மற்றும் அரசாங்கத் தலைவர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் உள்ள சிறிலங்கா தூதுவராலயத்தில் சிறிலங்கா சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எரிக் சூல் ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில், தென்னிலங்கை அரசியலில் தீர்க்கமான முடிவொன்று ஏற்பட்டு சமாதான நடவடிக்கைகள் மீண்டும் தொடங்குவதை தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சிறிலங்காவில் யுத்தக் கண்காணிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

– புலிகள் கலந்துகொள்ளாமையால் –

# புலிகள்-படையினர் சந்திப்பு நேற்று நடைபெறவில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் வடபகுதியில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னெஸ் தெரிவிக்கும் பொழுது நேற்றைய கூட்டத்தில் தாம் கலந்துகொள்ள வில்லை யெனத் தமிழீழ விடுதலைப்புலிகள் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விளக்கம் கோரியுள்ளதாக அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலை ஊழியர்களின் போராட்டம் தொடர்கின்றது

(வடமராட்சி)

பதினைந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கம் தொடர்ந்தும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த செயற்பாடுகள் எவற்றிலும் ஊழியர்கள் நேற்றைய தினமும் ஈடுபடவில்லை.

இதேவேளை பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனப் பிரதி நிதிகள் இருவர் நேற்று வருகைதந்து துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தினர். பின்னர் அவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களையும், பல்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் ரணிலுடன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் டொரன் புறுவ் ஹொவ்டே சிறிலங்கா பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பு மரியாதை நிமித்தமாக நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். இதில் முக்கியமாக போர்நிறுத்த உடன்பாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் சமாதான முன்னெடுப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உரமானியத்தை அமுல் செய்யக்கோரி கொழும்பில் 15 விவசாயிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

உர மானியம் மீண்டும் கொண்டு வரப்படவேண்டும் என்று கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

15 விவசாயிகள் இந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

65வயதான மூதாட்டியும் இதில் அடங்குவார்.

800 ரூபாவாக இருந்த யூரியாவின் விலை 1200ரூபாவாக அதிகரித்து இருந்து தற்போது 800ரூபாவாக குறைக்கப்பட்டு எனினும் அதனை 500ரூபாவாக குறைக்க வேண்டும் எனவும் தொடர்ந்தும் விவசாயத்துக்கான மானியம் வழங்கப்படவேண்டும் என்று கோரியே மேற்படி உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே சனவரிமாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு அரசாங்கம் உரிய பதிலைஅளிக்காததினாலேயே இதனை தாங்கள் செய்வதாக உண்ணாவிரதிகள் தெரிவித்தனர். (32)

# வீட்டினுள் புகுந்த கான்ஸ்டபிள் நையப்புடைக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நிர்வாணமாக வீட்டினுள் நுழைய முற்பட்ட பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் மக்களால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று வல்வெட்டித்துறை சிவன் கோவிலடியில் நடைபெற்ற இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது;

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வல்வெட்டித்துறைச் சிவன் கோவிலடியில் நின்றவாறு பாடசாலையால் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளுடன் சேட்டைகளைப் புரிந்ததுடன் அருகிலிருந்த வீடொன்றினுள் நுழைய முற்பட்டிருக்கிறார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் குழுமிய மக்கள் கான்ஸ்டபிளை நையப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

-மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி -

# சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது!

(வடமராட்சி)

மீளக்குடியேற அனுமதிக்கக்கோரி குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த சாகும்வரையான உண்ணாவிரதப்போராட்டம் நேற்று பிற்பகலுடன் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. பிரதமரின் ஆலோசகர் கலாநிதி. க.குணசிங்கம் மற்றும் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கையினையடுத்தே சாகும்வரையான உண்ணாவிரதப்போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

முன்னதாக, உண்ணாவிரதப் போராட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று உண்ணாவிரதிகளில் பலரும் மிகவும் சோர்வுற்ற நிலையில் இருந்தனர். குறிப்பாக தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக, நீராகாரமின்றி உண்ணாவிரதத்தில் குதித்திருந்த செல்லக்கிளி ஆனந்த ரஞ்சன் எனும் பொதுமகன் எழுந்திருக்கக்கூட திராணியற்று படுத்திருந்தார். ஆனாலும் அவர் தமக்கு மருத்துவஉதவிகள் வழங்கப்படுவதை நிராகரித்திருந்தார்.

இதேபோன்று வலி.வடக்குப் பிரதேசச் செயலகம்முன்பாக சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலரும் சோர்வுற்றிருந்த நிலையில் அவர்களுக்கு மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு சேலைன் ஏற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் உண்ணாவிரதிகளுக்கும் யாழ். வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே போராட்டத்தை கைவிடும்முடிவு எடுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக தென்னிலங்கையில் தற்போதைய அரசியற்சூழலில் நாடாளுமன்று கலைக்கப்படலாமென்பதாலும், மக்கள் போராட்டம் தொடர்பாக யாரிடம் பேசுவதென்ற சிக்கல்நிலைகளையும் அடுத்தே போராட்டத்தை தற்காலிகமாக கைவிடமுடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (27)

# பிணையில் விடு சென்று கொண்டிருந்த 6 கொலைகள் சந்தேக நபர் வீதியில்வைத்து சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு, மருதானை மீன் பிளேசில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 11.00 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவம் இரு பாதாள உலகக் கும்பல்களுக்கிடையே இடம்பெற்ற மோதலின் எதிரொலியே எனக் கூறப்படுகிறது.

மேற்படி நபர் ஆறு கொலைகள் தொடர்பாக நீதிமன்றில் விசாரணைகள் முடிவுற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு வீடு சென்றுகொண்டிருந்தபோதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# யாழ்.பிரதேச செயலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் யாழ்.செயலகம் என்பவற்றிற்கு பொலிஸ் பாதுகாப்பு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. சுதந்திர தினத்தன்று இரவு உடுவில் பிரதேச செயலக கட்டடம் மீதும், அலுவலக வாகனம் மீதும் நடத்தப்பட்டதாக்குதல் களையடுத்தே இப்பாது காப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 56 வது சுதந்திர

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணா விரதம் கைவிடப்பட்டதை எதிர்த்து வயோதிபர் வெளிநடப்பு

எந்தவோர் முடிவும் எட்டப்படாத நிலையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுறுத்தும் முடிவைக் கண்டித்துப் போராட்டத்திலீடுபட்ட முதியவர் ஒருவர் அங்கிருந்துவெளிநடப்புச் செய்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்த விநாசித்தம்பி கந்தையா என்பவரே அவ்வாறு வெளிநடப்புச் செய்தவராவார்.

3ஆம் நாளான நேற்றையதினமும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்த செல்லக்கிளி ஆனந்தரஞ்சனுடன் இணைந்து இவரும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தார். பிற்பகல் வேளையில் போராட்டத்தை முடித்துக்கொள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பேச்சுக்களை நடாத்தினர். எந்தவொரு இறுதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசியல் கட்சியாக அங்கீகாரம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் ஆணையாளரால் ஒருகட்சியாக நேற்று அங்கீகரிக்கப்பட்டது.

ஏற்கனவே இக்கட்சிக்கு தாமரை மலர்ச்சின்னமாக கோரப்பட்டிருந்தாலும் கூட அது தொடர்பாக இடம்பெற்றிருந்த சில கருத்து மோதல்களை தவிர்த்து தற்போது வண்ணாத்துப்பூச்சி சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வண்ணாத்துப்பூச்சி சின்னத்திலேயே போட்டியிடும் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த 03.02.2004 அன்று முல்லை வைத்தியசாலைக்கும் முல்லை பேருந்து நிலையத்திற்குமிடையில் ச.தியாகராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு பேருந்து நிலையநேரக்கணிப்பாளரிடம் ஒப்படைக்கவும். (சி-7150)


## கிராமிய அ. வங்கியின் வவு. கிளை வரும் 9ஆம் திகதி திறக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கி வவுனியாக் கிளை 9ஆம் திகதியன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு யாழ். சாலை கனகராயன் குளம் பகுதியில் மேற்படி வங்கி திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வவுனியாவில் ஆறு பொலிசார் மீது ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு!

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் ஆறு பேருக்கு எதிராக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பைச் சேர்ந்த வான் சாரதியான கதிரேசன் ஜெயகாந்தன் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கடந்த முதலாம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிவந்துகொண்டிருந்த போது வவுனியாவில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையம் ஒன்றில் வைத்து சிவில் உடையில் வந்த ஆறு பொலிசார் என்னைக் கொலை செய்யப்போவதாக மிரட்டினர். 2001ஆம் ஆண்டு பொலிசார் மீது அநுராதபுரத்தில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திற்கும் எனக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவித்த அவர்கள் என்னை மிரட்டினார்கள்.

இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தபோதும் அதனை அவர்கள் ஏற்காது நிராகரித்துவிட்டனர்.

எனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவினர்எனக்குத் தகுந்த பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தல் வேண்டுமெனத் தெரிவித்தே அவர் தனது முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

## புத்தகக் கண்காட்சி

தேசிய கல்வி நிறுவகத்தினரால் புத்தகக் கண்காட்சி நடாத்தவுள்ளது.23ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (05)

## இன்று கூட்டம்

(முல்லைத் தீவு)

முல்லைத்தீவு ஒப்பந்தக்காரர்களுக்கான வேலைப் பட்டறை தொடர்பான கருத் தூட்டல் எதிர்வரும் 18,19,20 ஆகிய திகதிகளில் முல் லைத்தீவு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதன் முன்னேற்பாடான விடயங்கள் தொடர்பான சந்திப்பு இன்று காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட நிர்மாணிகர்கள் சங்கச் செயலகத்தில் நடைபெற உள்ளதால் இக்நாட் நிறுவனத்தில் பதிவுள்ள ஒப்பந்தக் காரர்கள் மட்டும் இக்கலந் துரையாடலில் கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட நிர்மணிகள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (20)

## மின் பிறப்பாக்கி அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவை(கணினிக் கல்வி) விருத்தி செய்யும் முகமாக மின் பிறப்பாக்கி ஒன்று அன்பளிப்பு செய்யப் பெற்றது.

நேற்று முன் தினம் காலை 9.00 மணிக்கு பழைய மாணவர் சங்கத்தினால் 5கிலோ வாற்ஸ் கொள்ளளவுடைய மின் பிறப்பாக்கி மேற்படி பாடசாலை சமூகத்தினரிடம் கையளிக்கப்பெற்றது. (சோ)


## முதலாம் ஆண்டு நினைவினில் நனைவோம்

கடந்த 07-02-2003 அன்று நெடுந்தீவு கடற்பரப்பில்
சிறிலங்கா கடற்படையினரின் சதியினால்
வீரச்சாவடைந்த

### கப்டன் பொதிகைத்தேவன்

*(சிவஞானஸ்கந்த மூர்த்தி தயாபரன்)*

புலோலி, யாழ்ப்பாணம்.

பிறப்பு: 16 10 1980



வீரகாவியம்: 07 02 2003

நெடுந்தீவு கடற்பரப்பில்
சிறிலங்கா கடற்படையின்
சதியினால் எம்மை எல்லாம்
தவிக்கவிட்டு உயிர்ப்பூவாய் பிரிந்து சென்றாய்
நீ சென்றாலும் உன் நினைவுடன்
உன் இலட்சியப் பாதையில் நாம் செல்வோம்.

பிரிவினால் துயருறும்
**உறவுகள்**

(சி-7151)



## சாவு அறிவித்தல்

### சுப்பையா சதாசிவம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சதாசிவம் (02-02-2004) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசம்மாவின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், உருத்திரசிங்கம் (நெதர்லாந்து), வன்னியசிங்கம் (பிரதம எழுதுநர் யாழ். மாவட்ட நீதிமன்றம்), அமிர்தலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசியக்கல்வியற் கல்லூரி பத்தனை) ஆகியோரின் அன்புத் தந்தையும்,ரதி (நெதர்லாந்து)மதியரசி பாலசிலோன்மணி(ஆசிரியை கொட்டகலை த.ம.வி.) ஆகியோரின் மாமனாரும், சண்முகம், காலஞ்சென்றவர்களான குமாரசாமி,கந்தசாமி (கௌரிஸ்ரோஸ் பதுளை) பாக்கியம், சாந்தலிங்கம்(ஸ்ரீபத்மா ரேடர்ஸ் கிளிநொச்சி) மற்றும் தர்மலிங்கம்,(கனடா) கதிரவேலு (முறிகண்டி சாமியார்), இராசலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும், நல்லையா, ஏகாம்பரம், சண்முகராசா (தவம்), காலம்சென்ற கெங்காதேவி, மற்றும் சரஸ்வதி,நடேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 08-02-2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 01.00 மணிக்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெற்பதி வீதி
செருக்கன்புலம்,ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

தகவல்:
**சா. மதன்**
(பேறாமகன்)
கிளிநொச்சி.

(4216)



## பணிநிலை வெற்றிடம்

### ஆயப்பகுதி

**ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

#### 01.அலுவலர் [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

#### 02.ஆய உதவியாளர் [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

#### 03.அலுவலக உதவியாளர் [ஆண்கள்]

தகைமைகள்:
ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

#### 04.பாதுகாவலர்

தகைமைகள்:
ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
- ஊழியர் நயநிதி வசதி உண்டு

**நேர்முகத்தேர்வு**

இடம்: ஆயப்பகுதி, நடுவப்பணியகம், கிளிநொச்சி

காலம்: 2004.02. 10ஆம்,11 ஆம் நாள் காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

02.02.2004 (சி-9084)

ஆயப்பகுதி,நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்



## பூநகரி.பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் வாடியடி,பூநகரி

### கட்டட மேற்பார்வையாளருக்கான விண்ணப்பம் கோரல்

எம்மால் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக கீழ் வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-** அ) க.பொ.த. சா/தரப் பரீட்சையில் தமிழ்,கணிதம்,விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட உரிய தொழில் நுட்பக்கல்லூரியில் தொழில்நுட்பவியலாளர் தேசிய தராதரப்பத்திரம்(குடிசார் எந்திரவியல்) சித்தியும்(என்.சீ.ரீ) ஐந்து வருடங்கள் துறைசார்ந்த பகுதியில் சேவையாற்றியவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் தொழில் நுட்பவியலாளருக்கான டிப்ளோமா (என்.டி.ரி) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

இ) கட்டட. மேற்பார்வையாளராக 3 வருடம் பணிபுரிந்த அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**வயது:-** வயது எல்லை கணிக்கப்படமாட்டாது.

**முடிவுத்திகதி:-** 15. 02. 2004.

மேற்படி தகைமையுடையவர்கள் விண்ணப்பத்தினை, பொதுமுகாமையாளர், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திக்கிடைக்கும் விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**திரு.கா.கார்த்திகேசு,**
தலைவர்,
பூநகரி.ப.நோ.கூ.சங்கம்.

(சி.9084)

# அச்சுறுத்தல் தரவல்ல பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இருந்ததாக நான் கூறவில்லை

## -அமெரிக்க சீ.ஐ.ஏ.யின் பணிப்பாளர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

**ஈராக்கில் பேரழிவைத்தரும் ஆயுதங்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் முடிவுசெய்தாலும், அதில் கணிசமான அச்சுறுத்தல் தருவதாக அமைந்துள்ளதென தாம் தெரிவிக்கவில்லையென அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் பணிப்பாளர் கூறியுள்ளார்.**

பாக்தாத் தொடர்பான அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்களில் தவறுகள் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்ட கருத்துக்களுக்குப் பின்னர் முதல் தடவையாக அதி காரபூர்வமாகவும் பகிரங்கமாகவும் தெரிவிக்கப்படுகின்ற கூற்று இதுவாகும். ஈராக்கில் பேரழிவு ஆயு தங்கள் இருந்தது பற்றி முன்னாள் அமெரிக்க ஆட்சியாளர், ஆயுத ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்த கூற்றுக்கள் அதன் உணமைத் தன்மை என்பன பற்றிய விவகாரம் தறபோது அமெரிக்காவில் சூடு பிடித்து ஆளும் கட்சியின் பல உயர் தலைவர்களுக்கு அரசியல் ரீதியான நெருக்கடிகளை உண்டுபண்ணியுள்ளது தெரிந்ததே.



பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஸ்பெயின் கப்பல் கட்டும் தொழிலாளர்களை அடக்க முற்படும் அந்நாட்டுக் கலகமடக்கும் பொலிசார்.

# பூமியதிர்ச்சியால் 22 பேர் உயிரிழப்பு

இந்தோனேசியாவில் பப்புவா மாநிலத்தில் ஏற்பட்ட பூமிய திர்ச்சியில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். பூமியதிர்ச்சி றிச்டர் அளவில் 6.9 என பதிவாகியுள்ளது.

# அணுவாயுத தொழில்நுட்பங்களை சட்டவிரோதமாக விற்க வேண்டாம்

## -அமெரிக்கா கோரிக்கை

(வாஷிங்டன்)

அணுவாயுத தொழில்நுட்பங்களை வேறு நாடுகளுக்குச் சட்டவிரோதமாக வழங்கும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட நாடுகள் அனைத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமெரிக்கா கோரியுள்ளது.

அணுவாயுத உற்பத்திகளில் ஈடுபடுகின்ற நாடுகளின் எல்லைகள் ஊடாகத் தொழில் நுட்ப மாற்றங்கள் இடம்பெற்று வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானின் அணுவாயுத தொழில்நுட்பங்கள் ஈரான்,லிபியா,வடகொரியா போன்ற நாடுகளுக்கு இரகசியமாக விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா இவ் வேண்டுகோளை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய,ஆசிய நாடுகள் பல இவ்வாறு இரகசியமாக அணுவாயுத தொழில்நுட்பங்களை விற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அமெரிக்கா மேலும் கூறியுள்ளது.

# கடுமையான ஊடகச் சட்டத்திற்கு சிம்பாவ்வே உயர் நீதிமன்றம் அங்கீகாரம்

(கராரே)

சிம்பாவ்வேயில் அமுலப்படுத்தப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய கடுமையான ஊடகச் சட்டங்களை அந்நாட்டின் உயர் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.


இச் சட்டத்திற்கமைய சிம்பாவ்வேயிலுள்ள சகல ஊடகவியலாளர்களும் தேசிய ஊடக ஆணைக்குழுவில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென கூறப்பட்டுள்ளது. அத்துடன் ஆணைக்குழுவின் சட்ட விதிகளுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு மீண்டும் பதவியேற்ற சனாதிபதி முகாவே ஊடகச் சட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இச் சட்டங்களை எதிர்த்து சுதந்திர ஊடகவியலாளர்கள் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதே வேளை சிம்பாவ்வேயில் தென்பகுதி மாவட்டத்தில் கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் முகாவேயின் கட்சி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.



காசாப் பகுதியில் யூதக் குடியேற்றத்தின் பாதுகாப்பிற்காக இஸ்ரேலிய இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள காவற் கோபுரம்.



அமெரிக்காவில் ''இதாகோ'' விமானப் படைத் தளத்தில் கடந்த வருடம் சாகஸ செயலில் ஈடுபட்டவேளை விபத்துக்குள்ளான அமெரிக்காவின் ''தண்டர் பேர்ட்ஸ்'' விமானம் இது நிலத்தில் மோத ஒரு விநாடிக்கு முன்பு விமானியை வெளியில் தூக்கி வீசியது.

# சியா முஸ்லிம் ஆன்மீகத்தலைவர் மீது ஈராக்கில் கொலை முயற்சி

(பாக்தாத்)

ஈராக்கில் அதிக அதிகாரங்களைக் கொண்ட சியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் படுகொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

பாக்தாத்திலிருந்து சுமார் 160 கிலோமீற்றர் தெற்கே அமைந்துள்ள அவரது வீட்டின் மீது ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து இவர் தப்பியுள்ளார்.

# பலஸ்தீன இராணுவ் அதிகாரி குண்டு வெடிப்பில் பலி

(ஜெருசலேம்)

பலஸ்தீன இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டுள்ளார்.

கஸாபகுதியிலுள்ள அகதி முகாம் ஒன்றின் அருகாமையில் அமைந்துள்ள அவரது வீட்டில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் காரணமாகவே இவர் உயிரிழந்துள்ளார். இவர் கமாஸ் இராணுவப் படையின் முக்கிய தலைவர் என கூறப்பட்டுள்ளது.

# அணுவாயுத தொழில்நுட்பத்தை விற்பனை செய்த விஞ்ஞானிக்கு பாகிஸ்தான் அதிபர் மன்னிப்பு

## -இவர் மீது விசாரணையும் நடக்காது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அணுவாயுதத்திட்டத்தின் தந்தையென வர்ணிக்கப்படுகின்ற அப்துல் கையீகானுக்கு சனாதிபதி முஷாரப் மன்னிப்பு வழங்கியுள்ளார்.

பாகிஸ்தானில் முதலாவது அணுகுண்டைத் தயாரித்த இவர் நாட்டின் தேசிய வீரர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அணுவாயுத தொழில்நுட்பங்களை வேறு நாடுகளுக்கு விற்றமைக்காக சுதந்திர விசாரணை நடத்தப்பட வேண்டுமென கூறப்பட்டமையை தான் ஏற்கப் போவதில்லையென முஷராப் தெரிவித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தானில் அணுவாயுதத்திட்டம் தொடர்பான எவ்வித ஆவணங்களையும் யாருக்கும் வழங்கப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் தனது நாட்டில் அணுவாயுதத்திட்டத்தைச் சோதனையிட ஐக்கிய நாடுகளுக்கு அனுமதியளிக்கப் போவதில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொபி அனான் கருத்து

(வாஷிங்டன்)

எந்த நாட்டு உளவுத்துறையாலும் துல்லியமாகத் தகவல்களைத்தர முடியாது என ஐ.நா. செயலாளர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க உழவு நிறுவமும் பிரிட்டிஷ் உளவு நிறுவனமும் தகவல்களை வழங்கின. இதனையடுத்து ஈராக் மீது படையெடுக்கப்பட்டு யுத்தம் நடைபெற்றது. முடிவில் சல்லடை போட்டுத் தேடியும் எந்தப் பேரழிவு ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் இரு நாட்டு உழவு நிறுவனமும் கேலிக்கிடமாகிவிட்ட நிலையில் கொபி அனான் மேற்படி தெரிவித்துள்ளார்.

# வட,தென் கொரியாக்களின் அமைச்சர்மட்ட பேச்சுக்கள் நிறைவு

## அடுத்த சுற்றில் அமெ. சீனா. ரஷ்யா பங்கேற்கும்

(சியோல்)

வடகொரியாவும் தென்கொரியாவும் அமைச்சர் மட்ட பேச்சுவார்த்தைகளை நேற்று நிறைவு செய்துள்ளனர்.

வடகொரியாவின் அணு ஆயுத திட்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றி அடைவதற்கு ஒன்றாக இணைந்து பணியாற்றுவதென இரு தரப்பினரும் உறுதி யளித்துள்ளனர்.

அமெரிக்கா,ஜப்பான்,ரஷ்யா, சீனா, ஆகிய நாடுகளும் சேர்ந்து மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 72 நாட்களில் தனிமனிதனாக உலகைச் சுற்றிச் சாதனை!

பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த பிரான்சிஸ் ஜோன் தன்னந்தனியாக ஒரு சிறு படகு மூலம் 72 நாட்களில் உலகைச்சுற்றிவந்து சாதனை படைத்துள்ளார்.

உலகின் 75 சதவீதமான கடலின் ஆழமும், அகலமும் அறிவியலின் மூளைக்கு இன்னமும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. பலபேர் கடலை ஆராயச் சென்று உயிரிழந்துள்ளார்கள்.

இந்நிலையில் கடற்பரப்பை முழுமையாகச் சுற்றிவருவது என்பது மரணப்போராட்டத்தை விடக்கொடுமையானது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் தனியாளாக உலகை 93 நாட்களில் சுற்றிவந்த மைக்கில் என்பவரின் சாதனையை ஜோன் முறியடித்துள்ளார்.

# காந்தி கொலைசெய்யப்பட்டது எப்படி?

## - கூறுகிறார் கோபால் கோட்சே

காந்தியை சுட்டுக் கொன்ற நதுராம் கோட்ஸே தூக்கிலிடப்பட்டார். அவரது சகோதரர் கோபால் கோட்சே சிறையில் இருந்து வெளிவந்து சுதந்திரப் பறவையாக இருக்கிறார். இப்போதும் அவர்,காந்தியை சுட்டுக் கொன்றதில் தப்பில்லை என்றே சொல்லி வருகிறார். காந்தி சுடப்படுவதற்கு பத்து தினங்களுக்கு முன்னர் அவரைக் கொலை செய்ய ஒரு முயற்சி நடந்தது. இம்முயற்சியில் ஈடுபட்டவரே கோபால் கோட்சே. காந்தி எப்படி சுடப்பட்டார் என்பதை அவரே பின்னர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார்.

1948ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி சரியாக மாலை ஐந்து மணி. அடுத்த ஐந்து நிமிடங்களில் காந்தி கொலை செய்யப்படவிருந்தார். பிர்லா தோட்டத்தில் காந்தி தங்கியிருந்தார். அவரைக் கொல்வதற்காக அந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு நதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே, விஷ்ணு காகரே ஆகியோர் நுழைந்திருந்தனர். நதுராமிடம் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கி ஏழு குண்டுகளுடன் காந்தியின் வருகைக்காக காத்திருந்தது. அப்போது தன் அறையிலிருந்து கிளம்பி காந்தி பிரார்த்தனைக் கூட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். காந்தி அப்போது சுகயீனம் அடைந்திருந்தார். நடந்து வந்த அவர் பலவீனம், தள்ளாமை காரணமாக இடது பக்கம் வந்து கொண்டிருந்த பெண்ணின் மீது சாய்ந்திருந்ததால் அவரது இடது பக்கம் அப்பெண்ணினால் முழுமையாக மறைக்கப்பட்டிருந்தது.

இப்போது கோட்சேவுக்கு ஒரு பிரச்சினை. இந்த நிலையில் சுட்டால் குண்டு அப் பெண்ணின் மீது பாயும். எனவே ஐந்து ஐந்தாகையில் நதுராம் கோட்சே, அப் பெண்ணைப் பிடித்து கீழே தள்ளினார். அப் பெண் விலகிக் கொண்டதும் ஒரு அடி முன்னெடுத்து வைத்த கோட்சே, ஒரு அடி இடைவெளியில் மூன்று முறை சுட்டார். இரண்டு குண்டுகள் காந்தியைத் துளைத்து வெளியேற, மூன்றாவது குண்டு இதயத்தில் தைத்தது. இதற்குள் தள்ளி நின்ற ஆப்தேயும், கர்கரேயும் கோட்சேவுக்கு அருகில் வந்து விட்டார்கள். காந்தி ஹே ராம்! என்று சொல்லாமலேயே மண்ணில் சரிந்தார். கோட்சே தன் வலது கையை உயர்த்தி துப்பாக்கியோடு பொலிசை அழைத்தார். பொலிசார் மூவரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்... இப்படி இந்திய சுதந்திர வரலாற்றில் மிக முக்கிய சம்பவத்தை வர்ணிக்கும் கோபால் கோட்சே காந்தியைத் தான் சுட முயன்றது பற்றியும் இப்படி விவரிக்கிறார்.



கோபால் கோட்சே

சாகேதராம் தான் காந்தியை கொலை செய்யும் முடிவோடு டில்லிக்கு வந்தார். ரயிலில் வந்த அவர் ஹோட்டல் மரினாவில் அறையெடுத்து தங்கினார். இதே அறையில் தான் நதுராம் கோட்சே, நாராயணன் ஆப்தே, மதன்லால் பட்வா மற்றும் இன்னும் இருவர் என எழுவர் காந்தியைக் கொலை செய்யும் திட்டத்துடன் தங்கியிருந்தோம். கொலை செய்யப்படுவதற்கு பத்து தினங்களுக்கு முன்னர் அவரைக் கொலை செய்யும் பொறுப்பை நானும் மதன்லால் பட்வாவும் ஏற்றுக் கொண்டோம்.

அன்று அவர் சொற்பொழிவு நிகழ்த்தும் பிர்லாமந்திரை அடைந்தோம். காந்தி அமரும் இடத்துக்குப் பின்புறம் ஒரு பணியாளர் அறையிருந்தது. அந்த அறையின் ஜன்னலில் இருந்து காந்தியை நான் குறிவைத்து சுடுவதாக ஏற்பாடு. நான் சுட்டதுமே சுடப்பட்ட விசயத்தை திசை திருப்ப, பிர்லா இல்லத்தில் இருந்து 150 அடி தூரத்தில் மதன்லால் பட்வா குண்டு வெடிக்கச் செய்ய வேண்டும். இந்த இரண்டுமே குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். நான் எனக்கு வரையறுக்கப்பட்ட நேரப்படி அந்த அறைக்குள் நுழைந்தேன். ஜன்னல் அருகே கயிற்றுக் கட்டில் இருந்தது. அதன் மீது ஏறி காந்தியைக் குறிபார்க்கத் தொடங்கினேன். அவரைச் சுடவேண்டிய நேரம் வந்ததும் துப்பாக்கி குதிரையை அழுத்தப் போகும் சமயத்தில் கயிற்றுக் கட்டில் அறுந்தது. நான் கீழே விழுந்து விட்டேன். எனவே நான் அவரைச் சுடவேண்டிய நேரம் கடந்து விட்டது. நான் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் சுடுவதற்காக முயற்சி செய்ய முனைகையில், தனது நேரம் வந்து விட்டதால் எனக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே ஆப்தே குண்டுகளை வெடிக்கச் செய்தான். இது சம்பவத்தை திசை திருப்பு வதற்குப் பதிலாக அவனைக் காட்டிக் கொடுத்து விடவே ஆப்தே பொலிசாரிடம் சிக்கினான்.

நான் அங்கிருந்து தப்பி பூனா சென்று விட்டேன். ஹோட்டல் அறை எண் 43இல் தங்கியிருந்த நதுராம் கோட்சே நாராயண் ஆப்தேயும் அங்கிருந்து விரைவாகக் கிளம்பி கான்பூர் சென்று விட்டார்கள். ஆப்தேயிடம் இருந்து விசயத்தைக் கறந்த பொலிசார் நதுராம் கோட்சே பற்றித் தெரிந்து கொண்டு ரயில்களைச் சோதனை போடத் தொடங்கினார்கள். ஆனால் அவர்கள் அச்சமயத்தில் டில்லியைத் தாண்டி இருந்தார்கள்! இந்தியா பிரிந்து பாகிஸ்தான் என்ற நாடு உருவாகுவதற்கு காந்தி காரணமாக இருந்தார் என்பதே தீவிர இந்துத்துவவாதிகளான இவர்கள் காந்தியைக் கொலை செய்வதற்கான பிரதான காரணம். காந்தி முஸ்லிம்களுக்குப் பரிந்து பேசுகிறார் என்று இவர்கள் கருதினர்.

பாகிஸ்தானுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமென அவர்கூறியது இந்தத் தீவிரவாத இளைஞர்களை கொதிப்பிற்குள்ளாக்கியிருந் தது. என கோபால் கோட்சே கூறியிருந்தார். ㅇ

# செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட "நஸோமி"யை வேறு திசையில் திருப்பிவிட யப்பான் முயற்சி


செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள யப்பா

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

"எதிர்பார்ப்பு" என்னும் பொருள் தரும் "நஸோமி" விண்கலம் தமது

பான் இக்கலத்தை அனுப்பியது. இது வெற்றியளித்திருக்கும் பட்சத்தில் இதுவே முதன்முதல் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட முதலாவது ஆய்வு கோளாக இருந்திருக்கும்.





னால் அனுப்பபட்ட "நஸோமி" என்ற விண்கலம் அண்மையில் கைவிடப்பட்டுள்ளது.

அக்கலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணமாகும். இதனைக் கண்டு பிடித்து திருத்துவதற்கு எடுத்த முயற்சிகளும் கைகூடாத நிலையிலேயே இது கைவிடப்பட்டுள்ளது.

இவ்ஆய்வுக் கலத்தை கனடாவின் ஆய்வு நிலையத்துடன் இணைந்து யப்பான் தயாரித்திருந்தது. விசேடமாக அனல் மின்சக்தியினால் இயக்கப்படும் ஒரு கருவி கனடாவில் தயாரிக்கப்பட்டு இதில் பொருத்தப்பட்டுள்ளது.

இக்கலம் 186 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 1998 ஆடி நான்காம் திகதி ககோசிமா (Cagoshima) விண்வெளி நிலையத்திலிருந்து தமது பயணத்தைத் தொடங்கியது. இக்கலத்தைச் செலுத்துவதற்கு M-V எனப்படும் ரொக்கட் பயன்படுத்தப்பட்டது. எரிபொருளுடன் 541கிலோ எடையுள்ள இக்கலம் 2004ஆம் ஆண்டு

பயணத்தை ஆரம்பித்த முதல் வருடத்திலேயே எரிபொருள் தொடர்பான சிக்கலுக்குள்ளாக நேரிட்டது. அத்துடன் கடந்த ஏப்ரலில் சூரியனின் வெப்பத்துக்கும் முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அதன் தொடர்பு சாதனங்களும் ஏனைய கருவிகளும் பாதிப்புக்குள்ளாகின. தொடர்பு சாதனங்களின் செயலிழப்பினால் எரிபொருள் வழங்கல் தொடர்பான சிக்கல்களை தீர்க்கவும் முடியாது விட்டன. இதனால் இக்கலம் கைவிடப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்தில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவே யப்

இது செவ்வாயின் துருவப்பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளவிருந்தது.

இவ்ஆய்வுக்கலம் செவ்வாயுடன் மோதிவிடாமல் இருக்க அதனை சூரிய மண்டலத்திலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதற்கேற்ற வகையில் இரண்டு வருடகாலத்திற்கு விண்ணில் தரித்து வைக்க அதாவது சூரியனைச்சுற்றி பயணம் செய்யும் வகையில் மாற்றியமைக்கப்படவுள்ளது. பின்னர் இதனை விண் வெளி நிலையத்துக்கு மீண்டும் கொண்டு வரும் ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டுவரு கின்றனர்.

### மின்காந்த அலைகள்

* காமாக்கதிர் **Gamma rays**
* X-கதிர் **X-rays**
* U.V கதிர் (கழியூதாக் கதிர்) **Ultra Violet rays**
* கட்புலனாகும் ஒளி **Visible rays**
* IR அலைகள் (செங்கீழ் அலை) **Infra red waves**
* மைக்குரோ அலை (நுண் அலை) **Micro waves**
* றேடியோ அலை **Radio waves**

### மின்காந்த அலைகளின் இயல்புகள்

* நேர்கோட்டில் செல்லும்.
* வளியின் வேகத்தில் செல்லும்
* குறுக்கலை வடிவில் ஊடுகடத்தப்படும்.
* இவை செல்வதற்கு ஊடகம் அவசியமில்லை.
* இடத்துக்கிடம் சக்தியைக் கடத்தும் இயல்புள்ளவை.
* இவை தெறித்தல்,முறிதல், கோணலடைதல் என்பவற்றிற்கு உட்படும்.


# மின்சாரப் பற்றாக்குறைக்கு மாற்றுவழி

நவீன உலகத்தில் அதிகரித்து வரும் இயக்க சக்திகளில் 40 வீதம் கனிய வளத்தின் மூலம் கிடைக்கப் பெறுகிறது. எனினும் இவ் எரிபொருள் பாவனையால் சுற்றாடல் பெரிதும் மாசடைகிறது. இதனால் உலகம் பாரிய தாக்கத்துக்குள்ளாகிறது ஆகவே எரிபொருள் பாவனையை குறைப்பதற்காக மாற்றுவழிகளைக்கண்டுபிடிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆசிய நாடுகளில் எரிபொருள் பாவனை குறித்து, நாடுகளுக்கென சில விதி முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே எரிபொருள் ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதற்கான விலையும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது. அத்துடன் எரிபொருள் பாவனையின் மூலம் ஏளியிடப்படும் புகை மூலம் காபன் -டிஒக்சைட்டினால் வளி மண்டலமும் பாதிக்கப்படுகிறது. அதனால் தற்போது அணு சக்தியைப் பயன்படுத்தி 35 வீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அத்துடன் பல நாடுகள் சூரிய ஒளியின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுத்துள்ளன . அவை மட்டுமின்றி இயற்கை வாயு மூலமும் மின்சாரத்தைப் பெறும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. கனியப் பொருட்கள் வாயிலாக மின்சாரத்தைப் பெறுதலைவிட இவற்றின்மூலம் மின்சாரம் பெறப்படுவதால் சூழல் மாசடைதலும் கட்டுப் படுத்தப்படுகின்றது. தற்போது கனிய எரிபொருள் மூலம் கிடைக்கும் 19.1கி.வோட் மின்சாரதை 2010 ஆம் ஆண்டளவில் இயற்கை வாயு மூலம் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பெறுவது ஆசிய நாடுகளிலேயே அதிகரித்துக் காணப்படுகிறது. இதில் 46 வீதமான அளவை யப்பான் உற்பத்தி செய்து முன்னிலை வகிக்கின்றது. மற்றும் காற்றின் மூலம் மின்சாரத்தைப் பெறுதலும் 7 மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் இயற்கையாக கிடைக்க ப்பெறும் வைக்கோல்,உமி,விறகு போன்ற வற்றையும் பயன்படுத்தி 2010ஆம் ஆண்டளவில் 330கி.வோட் மின் சாரத்தை பெறமுடியும் என கூறப்படுகிறது.

# ஒட்சிசன் ஊக்கி



ஜப்பான் மட்சூசிட்டா இலெக்ரோனிக் நிறுவனம் 'OZ air'என்ற ஒட்சிசன் ஊக்கி (Oxygan charger) ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இதனைப் பயன்படுத்துவதன் மூலம் ஒருவர் புதுத் தெம்பு பெறலாமென மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் சந்தைப் பெறுமதி 280க்கும் 466 அமெரிக்க டொலருக்கும் இடைப்பட்டதாகும்

# தெல்லிப்பளை வைத்திய அதிகாரி பிரிவில் போசாக்கின்மையால் 25 குழந்தைகள் இறப்பு

## வைத்திய அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஆண்டு 25 குழந்தைகள் போசாக்கு இன்மையால் இறந்திருப்பதாக சுகாதார வைத் திய அதிகாரி வைத்தியகலாநிதி திருமதி ந.கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.**

கடந்த கால யுத்த இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இதனால் போசாக்குள்ள உணவுகளைப் பெறு வதில் இவர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களால் இவ்வாறான குழந் தைகள் இறப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டும் வைத்திய அதிகாரி,

இவ்வாறு பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் இங்கு நோய்த்தாக்கங்களுக்கு உள்ளான நிலையிலும் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இவர்களுக்கு உதவிகளை வழங்க உதவும் அமைப்புக்கள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (33)

## பதவி நீடிப்பிற்கு சிபார்சு

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவிற்கு சேவை நீடிப்பு வழங்குமாறு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலமைப்பு குழுவிற்கு சிபார்சு செய்துள்ளார். இம் மாதம் 19ஆம் திகதியுடன் பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.வீதிகளில் வீதிமின்விளக்குகள் ஒளிரவிடப்படுவதில்லை

## -மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான வீதிகளில் வீதி மின்விளக்குகள் ஒளிரவிடப்படுவதில்லை என மக்களால் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இவ்வாறு பல வீதிகளிலும் இரவு நேரங்களில் மின் விளக்குகள் ஒளிரவிடப்படாமையால் வீதிகள் தோறும் பல கொள்ளைச் சம்பவங் களும், விபத்துச்சம்பவங்களும், கலாச்சாரச் சீரழிவுச் சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இரவு வேளைகளில் வீதி மின் விளக்குகளை ஒளிரவிட வேண்டியது இலங்கை மின்சார சபையின் பிரதான கடமையாகக் காணப்படுகின்ற போதும் மின்சார சபையினர் மீது இது குறித்த மக்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்து வருவதாக மேலும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

# உடனடித் தேர்தலுக்கான சாத்தியப்பாடு குறைவாக இருப்பதாக ஆய்வாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உடனடித் தேர்தல் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுவதாக சனாதிபதியின் அண்மைய செயற்பாடுகள் தெளிவுபடுத்துவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜே.வி.பி.யுடன் கூட்டு முன்னணி அமைக்கப்பட்டவுடன் உடனடித் தேர்தல் இடம்பெறும் என்ற ஊகம் பலமாக எழுந்த நிலையில் சர்வதேச அழுத்தங்களும் குறிப்பாக அயல்நாட்டு அழுத்தமும் சனாதிபதியை சிக்கல்களுக்குள் தள்ளியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாகத் தேர்தலை நடத்துவதனால் ஏற்படக்கூடிய பாதகமான சூழல் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கை முழுமையாக கைப்பற்றும் நிலை தோன்றும் என்பதோடு அதனால் விடுதலைப்புலிகள் பாராளுமன்றில் ஆதிக்கம் செலுத்தும் நிலை தோன்றும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மறுபும் இயல்பாகவே ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர விரும்பாத சனாதிபதி கட்சியின் ஒரு பகுதியினரின் வற்புறுத்தலின் பேரிலேயே கூட்டை உருவாக்கியதாகவும், ஆகையால் எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சிக்கு ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க பிரதமர் தலைமையிலான அரசுடன் இயன்றவரை உடன்பாட்டை ஏற்படுத்த முயல்வதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனாலேயே நேற்று முன்தினம் சுதந்திரதின உரையில் தேர்தல் குறித்து சனாதிபதி மௌனம் சாதித்ததுடன் கட்சியின் ஒரு தரப்பினரின் கோரிக்கைக்கு சனாதிபதி மௌனம் சாதித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பன்னங்கண்டி கிராம மக்களுடன் கிளி.காவல்துறையினர் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ காவல் பணிமனையினர் கடந்த மூன்றாம் திகதியன்று பன்னங்கண்டி கிராம மக்களுடன் சந்திப்பினை மேற்கொண்டுள்ளனர். மேற்படி சந்திப்பு அன்றைய தினம் பிற்பகல் 5.00 மணிக்கு பன்னங்கண்டி பாடசாலையில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின் போது அப்பகுதி மக்களது பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன் குற்றத்தடுப்பு சம்பந்தமான கருத்துரைகளையும் கிளி. காவல் பணிமனை மேற்பார்வையாளர் கண்ணாளன் மக்களுக்கு வழங்கியுள்ளார். இச்சந்திப்பின் போது தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்தைச் சேர்ந்த மனோகரனினால் வீதி ஒழுங்கு விதிமுறைகள் குறித்து அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# பூநகரியில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த த.சு.சேவை நடவடிக்கை

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாடியடி, நல்லூர்ப் பகுதியில் தமிழீழ சுகாதார சேவையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் ஜெயவரதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பிரதேசசபை, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி-பூநகரி, பாடசாலை மாணவர்கள் இணைந்து பொலித்தீன் பாவனைக்கட்டுப்பாடும், சிரமதானத்தில் பாவிக்கப்பட்டு தேங்கிய பொலித்தீன் அகற்றலும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் நல்லூர் மகா வித்தியாலயம், தியாகதீபம் திலீபன் மருத்துவமனை ஆகிய இடங்களில் பொலித்தீன் விழிப் புணர்வு, சுகாதாரக் கல்வியூட்டல் மேற்கொள்ளப்பட்டது. வாடியடிப் பகுதியில் பாடசாலை மாணவர்களால் சிரமதானப் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

# விஞ்ஞான தொழில்நுட்ப துறையில் வளர்ந்தாலேயே நாடு அபிவிருத்தியடையும்

## -விஞ்ஞான மன்றம் அறிக்கை

(கொழும்பு)

செல்வந்த நாடுகளான கைத்தொழில் நாடுகளுக்கு சமமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் முன்னேற வேண்டுமானால் அவற்றின் விஞ்ஞான தொழில்நுட்ப துறைகள் துரிதமாக முன்னேற்றம் அடைய வேண்டும் என சிறிலங்காவின் தேசிய விஞ்ஞான மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

செல்வந்த நாடுகள் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கு சதவீதத் தொகையை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் செலவிடும் அதேவேளை வறிய நாடுகள் 0.5 சதவீதத்தை மட்டும் ஒதுக்குகின்றன. 10 இலட்சம் பேருக்கு 3000 என்ற அடிப்படையில் கைத்தொழில் நாடுகளில் தொழில் நுட்ப நிபுணர்கள் உள்ள வேளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 800 பேரே உள்ளனர். இத்தகைய நிலைக்கு தீர்வு காண வேண்டுமானால் வறிய நாடுகள் அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீத தொகையாயினும் செலவிட வேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## - சி.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டணியின்

# தாமரை மலர் சின்னத்தை ஏற்க தேர்தல் ஆணையாளர் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சு.கட்சி- ஜே.வி.பி. இணைந்த கூட்டணியின் தேர்தல் சின்னமாக தாமரை மலரை ஏற்றுக் கொள்ள தேர்தல் ஆணையாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தாமரை மலர் ஒரு புனிதப் பொருள் என்பதாலும் பௌத்த வழிபாட்டிற்குரியதன்று. அது தேர்தல் சின்னப் பட்டியலில் இதுவரை இடம் பெறாததும் இதற்குரிய காரணமாதும். எனினும் வேறொரு பொருளை கூட்டணி தேர்தல் சின்னமாக அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். கூட்டு முன்னணியின் தேர்தல் சின்னமாக தாமரை மலரை அனுமதிக்குமாறு கடந்த 26ஆம் திகதி விண்ணப்பித்ததையடுத்து தேர்தல் ஆணையாளர் மேற்படி நிராகரிப்பை விடுத்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட அன்றே முன்னணியின் சின்னம் தாமரை மலரென பிரகடனப்படுத்தப்பட்டு முதல் கூட்டமேடையில் தாமரை மலர் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகிகள் தெரிவு இழுபறி நிலையிலுள்ளதால் இது பற்றித் தேர்தல் ஆணையாளரிடம் அறிவிப்பதென்ற சிக்கலும் முன்னணி உள்ளாகியுள்ளது.

இதனால் இது ஒரு சகுனத் தடை என கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## நோர்வேயின் பங்கு பற்றி ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வேயின் பங்கு என்ற தலைப்பில் ஆய்வொன்றைச் செய்வதற்காக நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து பேர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வே தொடர்ந்தும் பங்கெடுக்க வேண்டுமா? நோர்வே எத்தகைய மாற்றங்களைத் தனது முயற்சியில் செய்துகொள்ள வேண்டும்? சந்திரிகா தலைமையிலான அரசு சமாதான முன்னெடுப்பினை விரும்புகின்றதா? என்பது தொடர்பாக இங்கு ஆய்வை நடத்தவுள்ளனர்.

# பேரியலின் செயல் இஸ்லாமிய பெண்களை அவமதிக்கின்றது

## – முஸ்லிம் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி கடந்த வாரம் இணைந்து கொண்ட பின்னர் பேரியல் அஷ்ரப் டில்வின் சில்வாவிற்கு வணக்கம் செலுத்தி கைலாகு கொடுத்தார்.

இவரது இந்தச் செயற்பாடு இரண்டும் இஸ்லாமிய முறைக்கு முரணான செயலெனக்கூறி முஸ்லிம் முன்னணி என்ற அமைப்பு கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பேரியல் அஷ்ரபின் இந்த நடவடிக்கை இஸ்லாத்திற்கு முரணான செயல். அத்துடன் இஸ்லாமியப் பெண்களையும் அவமதிக்கும் செயலாகும். ஏற்கனவே அஷ்ரபின் காலத்தில் அவர் இவ்வாறு வேறொருவருக்கு வணக்கம் சொல்லிய பின் பொது மன்னிப்புக் கேட்டவர். எனவே அவரும் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டது முஸ்லிம்களுக்கு அவமானமாகும்.

டில்வின் சில்வாவை வணங்கித்தான் இவர் முஸ்லிம்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்க முடியுமாக இருந்தால் அந்த உரிமை எமக்கு அவசியமில்லை. இது தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் எம்.எச்.எம். ஹிஸ்புல்லா கருத்துத் தெரிவிக்கையில்,


ஒரு வணக்கம் செலுத்துவதும் மரியாதை செலுத்துவதும் வித்தியாசமானது. எனவே பேரியல் மரியாதையின் நிமித்தமே செயற்பட்டுள்ளார். அரசியல் முரண்பாடுகளாலேயே இக்கருத்து வெளிவந்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

# கரைச்சிப் பிரதேச சபைக்கான இருமாடிக் கட்டடத்திற்கு அடிக்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச சபை தலைமைச் செயலகத்திற்கென புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுப் பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி முன்னைய பொதுச்சந்தை வளாகத்தில் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு இரண்டு



மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

மேற்படி நிகழ்வில் வீதி அபிவிருத்தி திணைக்கள கிளிநொச்சி மாவட்ட எந்திரி வே.சிவயோகன், கிளி. மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையர் ரீ. குணபாலசிங்கம், கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்நித்தியானந்தம், பிரதேசசபைச் செயலர் திருமதி தி. அன்னலிங்கம், கிராம சேவையாளர் சுபாசுபதிப்பிள்ளை ஆகியோரும் புதிய கட்டடத்திற்கான அடிக் கல்லினை நாட்டி வைத்தனர்.

இந் நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பிரதேசசபை ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

கரைச்சிப் பிரதேச சபைக்கான இப்புதியஇரண்டு மாடிக்கட்டடம் 9.5மில்லியன் செலவில் கட்டப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 16.08.1974 | விண்ணில் 07.02.2000

## மேஜர் குமரன்

**பொன்னம்பலம் சசிகரன்**

[நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.]

உண்ணாமல் உறங்காமல் போராடினாய்
மண்ணின் விடியலுக்காய் விதையாகினாய்
எண்ணாத எண்ணங்களால் சருகாகினோம்
கண்ணா! குமரா! ஆண்டோ நான்காகுதே.

**எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார். (4195)

சி.சிவநேசன், இல.64/1, விசுவமடு.

# தென்னியங்குளம் பகுதியில் யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(மல்லாவி)

தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லைகளால் அங்கு வாழுகின்ற மக்கள் பீதியுடன் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

காட்டுப் பகுதிகளில் கடும் வரட்சி நிலவி நீருக்காகத் திரியும் காட்டு யானைகளினால் பயப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த 29-01-2004 அன்று மாலை கோட்டை கட்டியகுளத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அதிகாரி துணுக்காய்ப் பகுதியிலிருந்து கடமை முடிந்து தனது வீட்டுக்கு மாலை ஐந்து மணிக்குச் சென்றுகொண்டிருக்கும் போது வீதிக்குக் குறுக்கே வந்த யானையினால் துரத்தப்பட்டார். மயிரிழையில் உயிர் தப்பிச் சென்றுள்ளார். தொடர்ந்து இவ் வீதிகளில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதால் மக்கள் மிகவும் அச்சத்துடன் இருந்து வருகின்றனர். (24)

**வாடகைக்கார் உரிமையாளர் (மகிழுந்து) கழகம் வன்னி**

# பொதுச்சபைக்கூட்டம்

வாடகைக்கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 15.02.2004ஆம் நாள் ஞாயிறுகாலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவன மண்டபத்தில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

"நன்றி"

**நிகழ்ச்சி நிரல்**

- ★ அகவணக்கம்
- ★ தலைவர் உரை
- ★ செயலாளர் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்.
- ★ கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்.
- ★ புதிய நிர்வாகத் தெரிவு
- ★ நன்றியுரை

**வீ.சிதம்பரநாதன்**
**தலைவர்.**

தகவல்
**அ.பேசிசேவீர்**
**செயலாளர்.**

(சி-7148)

# அங்குரார்ப்பணம்

திருகோணமலை நகரில் அமைந்துள்ள சிவயோக சமாஜ ஆச்சிரமம் புனர் நிர்மாணம் செய்யும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை தைப்பூச தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அத்திவாரக்கல்லை திருமலையின் முதிர்ந்த தமிழறிஞர் ஞானசிரோன்மணி பண்டிதர் சி.வடிவேல் முதலில் நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் அத்திவாரக் கற்களை நட்டனர். (25)

# கூட்டம் நடைபெற்றது

(மன்னார்)

மன்னார் மாவட்ட விதைகள் உற்பத்தியாளர்கள் சங்கக் கூட்டம் நேற்று முன்தினம் அடம்பன் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதற்கு அரச அதிபர் [illegible]லிங்கம் தலைமை தாங்கினார். இதில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தன் [illegible] பணிப்பாளர் உட்பட கமநல அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை முன்வைத்தனர். (வி)

# புனரமைப்பு

(மன்னார்)

மன்னார் முருங்கனில் இயங்கி வந்த விவசாய ஆராய்ச்சி நிலையம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

இது கடந்த காலங்களில் யுத்தத்தினால் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வி)

# வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)

## புனரமைக்கப்பட்ட குளங்கள் கையளிக்கும் வைபவ

# அழைப்பிதழ்

1. மருதங்குளம்
2. சிறாட்டிக்குளம்
3. கரம்பைக்குளம்
4. மருதமடுக்குளம்
5. கூழாமுறிப்புக்குளம்
6. காஞ்சுரமோட்டைக்குளம்
7. இடைக் கட்டுக்குளம்

**காலம்** :- 1,2,3 (10/02/2004)
4,5,6,7 (12/02/2004)

**நேரம்** :- காலை 10.00 மணி

**இடம்** :- 1,2,3 பிரதேச செயலகம்-துணுக்காய்
4,5,6,7 பிரதேச செயலகம்-புதுக்குடியிருப்பு

**பிரதம விருந்தினர்**

திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
அரசாங்க அதிபர்-முல்லைத்தீவு மாவட்டம்.

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு.முகுந்தன் அவர்கள்
பொறுப்பாளர், அரசியல்துறை
முல்லைத்தீவு மாவட்டம்.

திரு.முல்லைவீரன் அவர்கள்
நீர்ப்பாசனப் பொறுப்பாளர்
பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்
முல்லைத்தீவு மாவட்டம்.

NEIAP

## நிகழ்ச்சி நிரல்

- * மங்கள விளக்கேற்றல்
- * தேசியக்கொடியேற்றல்
- * அகவணக்கம்
- * தலைமை உரை
- * தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பிரதிநிதி உரை
- * தமிழீழ நிர்வாக சேவை பிரதிநிதி உரை
- * தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி உரை
- * விருந்தினர்கள் உரை
- * குளங்கள் கையளிக்கும் நிகழ்வு

அன்புடையீர்!
திரு/திருமதி/செல்வி ..............................

எமது நியாப் திட்டத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்கள் கையளிக்கும் நிகழ்வில் தங்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதி திட்டப் பணிப்பாளரும்,**
**பணியாளர்களும்.**
**வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-7147)



சிந்தனைக்கு

இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-02-2004

## நிதி உதவி தேவை!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில வேளைகளில் உண்மை பேசுவது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது. இந்த வகையில் சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில், "தேர்தலுக்கான நிதி சுதந்திரக்கட்சியிடம் இல்லை. ஆகையினால் இரு மாதங்கள் பொறுமை காக்க வேண்டும் எனச் சனாதிபதி தெரிவித்துள்ளமை ஒரு வகையில் அத்தகையதே.

சு.கட்சி–ஜே.வி.பி.கூட்டணி கைச்சாத்தானதைத் தொடர்ந்து பாராளுமன்றம் இன்று கலைக்கப்படலாம், நாளை கலைக்கப்படலாம் என்ற ஊகங்கள் எதிர்வுகூறல்கள் மத்தியில், சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்கள் வெளிவந்துள்ளன. வேறு விதமாகக் கூறுவதானால் தேர்தல் எப்பொழுது என்ற எதிர்பார்ப்புடன் உள்ள சு.கட்சியினருக்கு அது காலதாமதம் ஆவதற்குச் சனாதிபதி கொடுத்துள்ள விளக்கமாகவும் இது கொள்ளத்தக்கது.

சனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறுவதில் ஓரளவு உண்மை இல்லாமல் இல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் பக்கத்தில் இன்று தேர்தலுக்காகப் பணம் செலவிடத்தக்கவர்கள், உதவி செய்யக்கூடியவர்கள் மட்டுமல்ல நிதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய மூலகங்களும் இல்லை.

எத்தரப்பிற்காயினும் தேர்தலுக்கு நிதி அளிப்பவர்கள் பெரும் கைத்தொழிலாளர்களும், வர்த்தகர்களுமே ஆகும். பொதுவில் இவர்களில் அதிகமானோர் எப்பொழுதும் ஐ.தே.கட்சி சார்பானவர்களாகவே உள்ளனர். சில வேளைகளில் அவர்கள் சு.கட்சிக்கும் நிதி உதவி செய்யக்கூடிய நிலையில் இருந்திருப்பினும் தற்பொழுது 'பெரும் புள்ளிகள்' எவருமே சனாதிபதிக்கு நிதியுதவி அளிக்கும் நிலையில் இல்லை.

ஏனெனில் சனாதபதி சந்திரிகாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் அவர்களுக்கு எந்த வகையிலும் அனுகூலமானதாக இருக்கவாய்ப்பில்லை. ஒரு புறத்தில் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலம் குழப்பத்திற்குள்ளாகியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. இது குறித்து வர்த்தக சமூகமும் வெளிப்படையாகவே எச்சரித்தும் உள்ளது. இந்நிலையில் தேர்தல் ஒன்று வருமாயின் பொருளாதாரம் மேலும் மோசமாகப் பாதிப்படையும், முதலீட்டாளர்கள் பெரும நஷ்டத்தினை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்பது அவர்களுக்கு நன்கே தெரியும்.

அடுத்ததாக சனாதிபதி தலைமையிலான சு.கட்சி ஜே.வி.பி. யுடன் செய்துகொண்டுள்ள உடன்பாடு முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் திருப்தி அளிப்பதாக இல்லை. ஜே.வி.பி ஏற்கனவே முதலாளித்துவத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதோடு, வெளிநாட்டு முதலீட்டிற்கு ஏற்றதான நிலைப்பாட்டைக் கொண்டதாகவும் இல்லை. தேர்தல் ஒன்றில் சு.கட்சி–ஜே.வி.பி.கூட்டணி அதிகாரத்திற்கு வரின் வெளிநாட்டு முதலீட்டில் பெரும் வீழ்ச்சி ஏற்படுவதென்பது திண்ணம். இது பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பை விளைவிப்பதாகிவிடும்.

உள்ளூர் நிலை இவ்வாறிருக்க தற்பொழுது தேர்தல் நிதிக்கெனச் சனாதிபதி சந்திரிகாவிற்கு பெரும் தொகை நிதியாக வழங்கக் கூடிய அந்நிய சக்திகளும் இருப்பதாக இல்லை. ஓரிரு சக்திகள் சனாதபதிக்கு நெருக்கமானவையாக இருப்பினும் அவ்வாறான சக்திகள் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் உதவுவதில் அக்கறை கொண்டுள்ளதா என்பதும் கேள்விக்குரியதே. அத்தோடு, உதவக்கூடிய சக்திகளை விட அதிகரித்த உதவிகளை வழங்கக் கூடிய சக்திகள் எதிர்த்தரப்பில், உள்ளன என்பது ஒருபுறமிருக்க சனாதிபதி சந்திரிகா தேர்தலுக்குச் செல்வதை அவருக்கு உதவக்கூடிய சக்திகளும் விரும்புவதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, தேர்தலுக்கான நிதி பெறக்கூடிய அரச மூலகங்கள் சனாதிபதியின் கைகளில் இல்லை. குறிப்பாக நிதி அமைச்சு சனாதிபதியிடம் இல்லை. அது மட்டுமல்ல, சனாதிபதியின் தேவைகளுக்கும் பாராளுமன்றம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி இருப்பதினால் சனாதிபதியால் அரச வளங்களிலிருந்து தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதும் சாத்தியப்பாடானதல்ல.

இது மாத்திரமல்ல, தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஏனைய வளங்களான போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய தேவைகளுக்குமான அரச வளங்களையும் சனாதிபதியினால் தேவைக்கேற்ற வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் தற்பொழுது மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்துத் தற்பொழுது ஆயுதப் படையும்,பொலிசும், பிரச்சார ஊடகங்களும் அவரது கட்டுப்பாட்டில் இருப்பதனால் அவற்றைத் தேர்தல் மோசடி, வன்முறை பொய்ப் பிரசாரம் என்பவற்றிற்குப் பயன்படுத்தலாம். ஆனால், தேர்தலை எதிர்கொள்வதற்கான பணப் பற்றாக்குறை அவரிடம் இருக்கவே செய்கின்றது.

இந்நிலையில் தான் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்துக்கொண்ட பின்பும் சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைக்கவும், தேர்தலை எதிர்கொள்ளவும் தாமதம் செய்கின்றார். பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதியதொரு காபந்து அரசாங்கத்தைச் சனாதிபதியால் அமைக்க முடியும். ஆயினும் அவர் எதிர்பார்க்கும் நிதிவளங்கள் கிடைக்க வாய்ப்பும் குறைவாகவே இருக்கும் என்பது மட்டுமல்ல. இந்நடவடிக்கை எதிர்பார்ப்பையும் அதிகப்படுத்துவதாகிவிடும்.

இந்நிலையில் தான் சனாதிபதி தனது விருப்புக்கேற்ற விதத்தில் செயற்படுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கி இருக்கின்றார். ஆனால், சனாதிபதி சந்திரிகாவை இக் காரணி முழுமையாகக் கட்டுப்படுத்தி வைக்கும் எனக் கூறிவிட முடியாது. ஏனெனில் இலங்கையின் இறைமையை விற்று ஆட்சி அதிகாரத்தைப் பெற அவர் தயாராக இருப்பதனால் யாருடனும் பேரம் பேசுதலின் மூலம் அவர் தேர்தல் நிதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். தேர்தலை எதிர் நோக்கவும் தயாராகலாம்.

## கலாச்சார சீரழிவுகளால் யாழ்.இல் தற்கொலை சம்பவங்கள் அதிகரிப்பு

### - யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகத் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து நேற்றுமுன்தினம் வரை 10 தற்கொலையில் இறந்தவர்களது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மீளக் கையளிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது, இதைவிட தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியடைந்த பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் வெளியேறியுள்ளனர்.

இவ்வாறான தற்கொலை முயற்சிகளின் அதிகரிப்பானது வறுமை மற்றும் கலாச்சாரச் சீரழிவுகளால் ஏற்படுகின்ற பின்விளைவுகளாகவே ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை இவற்றிற்கு போர் வன்முறைகளால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி மன நிலையும் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (33)

## வலி.வடக்கு மக்களின் கோரிக்கை தொடர்பாக யாழ்.இராணுவத் தளபதியை விசாரிக்கவுள்ளோம்

### -ம.உ.ஆணைக்குழு அதிகாரி ருவான் சந்திரசேகர

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-வடக்குப் பகுதி மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள், படையினரால் அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தம் சொந்த இடங்களில் வாழ்வதற்கான வாழ்வுரிமை மறுக்கப்படுவதற்கான காரணம் குறித்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகர இது குறித்து உடனடியாகவே யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவையும் அழைத்து விசாரணை செய்யப் போவதாகவும் தெரிவித்தார். (33)

## மீண்டும் தேர்தல் நடைபெறுமாயின் தொங்கு பாராளுமன்றே உருவாகும்

### மு.கா.தலைவர் ரவூப்ஹக்கீம்

(கொழும்பு)

மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெறுமானால் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் தொங்கு பாராளுமன்றத்தைக் கொண்டதாக இருக்குமென அமைச்சர் ரவூப்ஹக்கீம் கூறியுள்ளார்.

எனவே முஸ்லிம்கள் ஒரே அணியில் நின்று பேரணியாக எதிர்கால சவால்களைச் சந்திக்க வேண்டுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்பட்டுள்ள நிலையில் முஸ்லிம்களின எதிர்கால செயற்பாடுகள் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இதனிடையே தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ் கூட்டமைப்பை ஏற்படுத்தி செயற்படுகின்றனர். அதேபோன்று சிங்கள மக்கள் புதிய கூட்டமைப்பை ஏற்படுத்துகின்றனர். இதனிடையே முஸ்லிம் மக்கள் தற்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அணியில் அணிதிரண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். 32)

## அதாவுல்லா குழுவினர் ஐ.தே.மு.விலிருந்து விலகலாம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதாவுல்லா குழுவினர் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகப்போவதாக செய்திகள் வந்துள்ளன. இவர்களை ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து பிரித்தெடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து இவர்கள் மூவரையும் விலக்கிக் கொண்டால் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை குறையும். அப்படிக குறைந்தால் அரசாங்கத்தை கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த முடியும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி கருதுகிறது.

## மனோ–மலிக் குழு 9-ம் திகதி மீண்டும் கூடும்

(கொழும்பு)

சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையேயான அதிகார முறுகலைத தவிர்க்கும் வழிவகைகளைக் கண்டறியும் நோக்கில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்ற மலிக் சமரவிக்கிரம மற்றும் மனோதித்தவெல குழு மீண்டும் எதிர்வரும 9ஆம் திகதி சந்திக்கவுள்ளது.

இதன்போது அதிகார முறுகலைத்தீர்க்கும் வகையில் பிரதமர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் ஆராயப்படவுள்ளன. அத்துடன் சனாதிபதி பொறுப்பேற்றுள்ள பாதுகாப்பமைச்சின் அதிகாரங்களை மீளவும் தருமாறு கேட்டுவந்த பிரதமர் தரப்பினர் தற்போது போர் நிறுத்த உடன்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை யாவது தருமாறு வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனிடையே சனாதிபதி-பிரதமருக்கிடையிலான அதிகார முறுகலில் சிறு தளர்வு ஏற்படும் வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையே சமாதானத் தீர்வு தொடர்பாக முக்கிய கொள்கை இணக்கம் ஏற்படவுள்ளதாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார். (32)

## முதலாவது இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி

மெல்போர்னில் நேற்று இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற வி.பி.கிண்ண முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது இறுதிப்பந்தயத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்தியஅணி வீரர்கள் பிரட்லி, கிளஸ்பி, ஹார்வே ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். எனினும் 7வது விக்கெட் இணையாக ஆடிய கேமன்பதானி, அகர்கார் ஆகியோர் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

கடைசியாக 49ஓவரில் இந்தியா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

223 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பம் முதலே ஓட்டங்களைக் குவித்தது. அவ்வணியின் ஓட்ட எண்ணிக்கை 24ஆக இருக்கும்போது கில்கிறிஸ்ட்டின் விக்கெட்டை இழந்தது. எனினும் அணித்தலைவர் றிக்கி பொண்டிங் மத்தியூ ஹேயடன் இணை வெற்றி நோக்கி நகர்ந்தது. பின்னர் அவர்களும் ஆட்டமிழக்க இறுதியில் 40.1ஓவர் எஞ்சியிருந்த நிலையில் மூன்று விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 223ஓட்டங்களை அவ்வணி பெற்று வெற்றியீட்டியுள்ளது.

இரண்டாவது இறுதி ஆட்டம் நாளை சிட்னியில் நடைபெறும். இவ்வாட்டத்தில் இந்தியஅணி வெற்றி பெற்றால் 3வது இறுதியாட்டம் வரும் 10ஆம் திகதி பேர்த்தில் நடைபெறும்.



# மொஸ்கோ சுரங்க ரயில் குண்டுவெடிப்பு
# 39 பேர் பலி; 120 பேர் படுகாயம்

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் சுரங்க ரயில் அமைப்புக்குள் நடந்த வெடிகுண்டுத்தாக்குதலில் 39பேர் பலியாகி உள்ளனர். 120பேர் காயமடைந்துள்ளனர்.

மொஸ்கோ நகரின் மையப்பகுதியில் உள்ள சுரங்க ரயில்நிலையத்தில் ரயில் பெட்டி ஒன்றில் இந்தக் குணடுத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதேவேளை இத்தாக்குதலை செச்சினிய பிரிவினைவாதிகளே மேற்கொண்டதாக ரஷ்யஅதிபர் தெரிவித்துள்ளார்.

ஆனால் செச்சினியப் போராளிகள் இது ஒரு ஈனச் செயல் எனவும் இதனை தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை சேவைக்குத் திரும்பக் கோரிக்கை

இதுவரை காலமும் பாடசாலைப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈபட்டுவந்த முல்லைமாவட்ட அனைத்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் எதிர்வரும் திங்கட் கிழமை முதல் பாடசாலைகளுக்குச் சென்று தங்கள் கடமைகளைப் பெறுப் பேற்றுக் கொள்ளுமாறு சங்க முல்லை மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

நிரந்திர நியமனம் தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்து கடந்த சில மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கடந்த மாதம் மேற் கொண்ட பிரதமர் மற்றும் அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் இந்த முடிவை எடுத்துள்ளது. எனினும் தேவை ஏற்படும் போது சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு தயாராக இருக்குமாறும் அனைத்து ஆசிரியர்களையும்கேட்டுக் கொள்வதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## கிளி.அரச உத்தியோகத்தர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணஅரசாங்க உத்தியோகத்தர் சங்கம் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

காலை 10.00 மணிக்கு கிளி. மாவட்ட அமைப்பாளர் சு.மணிவண்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறவுள்ளது. அனைத்து அரச உத்தியோகத்தர்களையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கச்சதீவு ஆலய உற்சவத்தை ஒரே நாளில் நடத்தி முடிக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி ஆலயத்திருவிழாவை அடுத்தமாதம் 30ஆம் திகதி ஒரு நாளிலேயே நடத்தி முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்கள், நெடுந்தீவு பங்குத்தந்தை, மாகாணசுகாதார அதிகாரிகள், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி உட்பட பலர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பின்வருமாறு விடயங்கள் ஆராயப்பட்டன.

□ நிதிப்பற்றாக்குறை, குமுதினிப் படகு பழுது அடைந்துள்ளதால் பாதுகாப்பற்ற போக்குவரத்து என்பவை காரணமாக மூன்று நாட்கள் நடைபெறும் உற்சவத்தை ஒரு நாளில் முடிப்பது.

□ மேற்படி ஆலயத்துக்கு படகுச் சேவை நடத்த விரும்புவோர் அடுத்த மாதம் முதலாம், 10ந் திகதிகளில் முறையே குறிக்கட்டுவானிலும், நெடுந்தீவிலும் படகுகளைப் பதிவு செய்தல், அன்று படகுகளுக்கு தகுந்த சான்றிதழ் வழங்கப்படுவது குறித்து கடற்படை அதிகாரி தெரிவித்தமை.

□ யாத்திரிகர்களுக்கான சுகாதார வசதிகளை தமது பணிமனை செய்து கொடுக்க மாகாண சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம்முறை ஆயிரத்துக்கும் குறைவான யாத்திரிகர்களே கலந்து கொள்வர் என பங்குத்தந்தை தெரிவித்துள்ளார்.

### கண்காணிப்...

புக்கள் நடைபெறாத சூழலில் போர் நிறுத்த உடன்பாடு இரு தரப்பாலும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுவது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் சுட்டிக் காட்டியதுடன் இவ்வாறான நிலையில் போர்நிறுத்த உடன்பாட்டை தொடர்ந்தும் கடைப்பிடித்து இரு தரப்பும் உதவ வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் கருத்துக்களை கேட்டறிந்த பிரதமர், போர்நிறுத்த உடன்பாட்டை அமுல்செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பாக அவருக்கு விளக்கியுள்ளார்.

தற்சமயம் எழுந்துள்ள அரசியல் முறுகல் காரணமாக சமாதான முன்னெடுப்புக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இந்த நிலையில் போர் நிறுத்த உடன்பாடு எந்தளவிற்குக் கடைப்பிடிக்கப்படுகிறதோ அதன் அடிப்படையிலேயே அடுத்த கட்ட சமாதான நகர்வுகள் முன்செல்ல முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவத் தளபதி லயனல் பலகல்லவையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

### ஐக்கிய...

இதேவேளை சனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற அறிவிப்பு நேற்றிரவு அல்லது இன்றிரவு வெளியிடப்படும் என்ற தகவல் முன்னர் வெளியானபோதும் அது இன்று தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

அதாவது வடமேல் மாகாண சபையின் காலம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அத்துடன் அந்த மாகாணசபை கலைக்கப்பட்டு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி தேர்தல்களை ஒரே தடவையில் நடத்தவேண்டும் என்பதினால் ஏனைய மாகாண சபைகளும் அதேதினத்தில் கலைக்கப்படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா? அல்லது பிற்போடப்படுமா என்பது தொடர்பான தகவல் எதுவும் தற்போதைக்கில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மனோதித்தவெலமலிக்சமரவிக்கிரம ஆகியோரின் பேச்சுவார்த்தை தற்சமயம் இணக்கமுடன் நிறைவடையும் தறுவாயில் இருப்பதால் பொதுத்தேர்தலுக்கு சாத்தியமில்லை என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. (32)

### வேலை நிறுத்தம் முடிந்தது

(கொழும்பு)

ரயில்வே சேவையில் இடம் பெற்று வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரவுடன் முடிவடைந்துள்ளது.

கடந்த பதினொரு நாட்களாக இடம்பெற்றுவந்த மேற்படி வேலை நிறுத்தம் அதிகார சபையின் அனைத்து அதிகாரங்களும் ரயில்வே திணைக்களத்திற்கு இரண்டு வருடங்களுக்கு மாற்றப்படும் என்ற அரசின் உறுதிமொழியின் அடிப்படையில் இந்த வேலைநிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே இன்று முதல் இலங்கையில் ரயில்வே சேவைகள் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

### மக்களவை கலைப்பு

இந்தியாவின் நாடாளுமன்றின் மக்களவை கலைக்கப்பட்டுள்ளது.

இந்திய சனாதிபதி அப்துல்கலாம் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையின் கீழ் ஆட்சி நடத்தும் கூட்டணி அரசின் வேண்டுகோளை அடுத்து நாடாளுமன்றின மக்களவையை கலைத்துள்ளார்.

மக்களவையின் முடிவுக்காலம் ஆறுமாதங்கள் உள்ளபோதிலும் அதற்கு முன்னராக நாடாளுமன்றில் மக்களவை கலைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தேர்தல் குறித்த திகதியினை தேசிய தேர்தல் ஆணையகம் அறிவிக்கவில்லை.

### உண்ணா...

முடிவும் எய்தப்படாது போராட்டத்தை கைவிடுவதை ஆட்சேபித்த அவர், எவருடனும் பேசாது தமது துவிச்சக்கர வண்டியில் ஏறி அங்கிருந்து வெளியேறிவிட்டதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது. (27)

### யாழ்...

லைக் கழக வளாகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். மேற்படி போராட்டம் கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (27)

### வீட்டினுள்..

புடைத்ததுடன் அவரை மடக்கிப் பிடித்துப் பொலிசாரிடமே கொடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தமது கலாச்சாரத்தைச் சீரழிக்கும் முயற்சி என அப்பகுதி மக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

### நோர்வேயின்..

புக் குழுவினர் தமது நடவடிக்கைகளை மிகவும் சிறந்த முறையில் செய்து வருவதாகவும், இதற்கு காரணம் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை இதய சுத்தியுடன் ஏற்றுக் கொண்டதே ஆகும் எனத் தெரிவித்துள்ளார். (32)

### யாழ்.பிரதேச..

தினமாக கடந்த புதனன்று இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பின் மத்தியில் கொடியேற்றல் நிகழ்வுகள் பிரதேச செயலகங்கள் மற்றும் யாழ்.செயலகத்தில் இடம் பெற்றிருந்தன.

இந்த நிலையில் அன்று நள்ளிரவு உடுவில் பிரதேச செயலகப் பகுதியில் தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தன இதையடுத்தே மீண்டும் இவ் அலுவலகங்களிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (27)

- நிதர்சனம் வெளியீடாக -

## இரு ஒலிநாடாப்பேழைகள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு

நிதர்சனம் வெளியீட்டகத்தினால் உருவாக்கப்பட்ட இரு ஒலிநாடாப் பேழைகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

நேற்றையதினம் யாழ்.பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கில் நிதர்சனம் வெளியீட்டுப் பிரிவின் போராளியான வீரா தலைமையில் இடம்பெற்ற இவ் வெளியீட்டு விழாவில் பொதுச் சுடரினை மாவீரரான லெப்டினன்ட் அரசுவின் தந்தையும் தமிழீழ தேசியக் கொடியை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பனும் ஈகச்சுடரினை யாழ். மாவட்ட அரசியல் துறையின் மகளிர் பொறுப்பாளர் கலை விழியும் ஏற்றிவைத்துநிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கேணல் கிட்டுபீரங்கிப் படையணி மற்றும் லெப்கேணல்குட்டிசிறி மோட்டார் படையணி ஆகியவற்றின் சிறப்பு வெளியீடான "வரும் பகைதிரும்பும்" என்ற ஒலிநாடாப் பேழையினை குட்டிசிறி மோட்டார் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் வெளியிட்டுவைக்க அதனை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பெற்றுக்கொண்டார். "ஊர்போகும் மேகங்கள்" என்ற ஒலிநாடாப் பேழையை யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டு வைக்க, வணபிதா பேணாட் அடிகளார் பெற்றுக்கொண்டார். வரவேற்புரையை யாழ்.மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் நிகழ்த்தினார். வெளி யீட்டுரையை தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்தினார். நன்றியுரையினை தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளர் ராதா நிகழ்த் தினார்.

மேற்படி நிகழ்வில் பேராசிரியர்கள், மாணவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (33)

## கிழக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவி துறப்பு

கிழக்கு மாகாணபல்கலைக்கழக துணைவேந்தர் மூக்கையா கடந்த சனவரிமாதம் 27ஆம் திகதி தமது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார். பல்கலைக்கழக மேலவைக்கும் மூதாவைக்கும் இடையிலான கருத்துமுரண்பாடுகளும் மாணவர்களின் வேலை நிறுத்தமுமே காரணம் என பி.பி.சிக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கலை கலாச்சாரப் பிரிவைச்சேர்ந்த 150மாணவர்களின் பெறுபேற்றினை முற்றாக ஏற்றுக் கொள்ளமுடியாது என்ற கருத்தை முன்வைத்து அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இத்தகைய நிலையில் தன்னால் தொடர்ந்தும் பதவிவகிப்பதென்பது தனது மனச்சாட்சிக்கு முற்றும் புறம்பான செயல் என்பதனாலேயே தான் தனது பதவியை இராஜினாமச் செய்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்.தேசிய எழுச்சிப்பேரவையின் பேராளர் மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்களுக்கான உயர் மட்ட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை தொடக்கம் மாலைவரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் சூ.சிறில் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில்,

தற்போதைய சமாதான சூழ்நிலை மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக யாழ். மாவட்ட மக்களின் நிலைப்பாடுகள், இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவக் கெடுபிடிகளால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் எனப் பல்வேறு விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

இதில் போராளிகள், பொதுமக்கள், தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (33)

## திலங்க சுமதி பாலவுக்கு எதிராக மேலும் ஐந்து பேர் சாட்சியம்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிகொம் தலைவர் திலங்க சுமதி பாலவுக்கு எதிராக சாட்சியம் அளிப்பதற்காக மேலும் ஐந்து பேரை விசாரணை செய்வதற்கு கொழும்பு நீதி மன்றம் நேற்று அங்கீகாரம் அளித்துள்ளது.

ஏற்கனவே திலங்க சுமதிபால 1998 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது தம்மிக்க அமரசிங்க என்ற பாதாள உலக உறுப்பினர் ஒருவரை போலி ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பியதாக குற்றம் சாட் டப்பட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு பொருத்தமற்றது என்ற வகையில் அவர் சமர்ப்பித்திருந்த இரண்டு மனுக்கள் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட நிலையில் குற்றப்புலனாய்வுத்துறை சமர்ப்பித்த இவ் வேண்டுகோளிற்கு நீதிமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் மேலும் ஐந்து பேர் திலங்க சுமதி பாலவுக்கு எதிராக சாட்சியம் அளிப்பதற்கு எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (32)

### புலிகள்...

அதேநேரம் கூட்டத்தை பின்னர் நடத்துவதற்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகள் தம்மால் கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்பட்டவர்கள் மற்றுமொரு நிகழ்ச்சியில் பங்குபற்றுவதால் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியவில்லையென உள்ளூர் கண்காணிப்பாளரிடம் அறிவித்துள்ளனர். ஆயினும் இலங்கைக் கண் காணிப்புக் குழு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து எழுத்து மூல விளக்கத்தைக் கோரி இருப்ப தாகவும் பேச்சாளர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதேவேளை இந்தக் கூட்டம் எதிர்பாராத விதமாக இரத்துச் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதி இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு ஆட்சேபனைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.